**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE,**

**DINDIGUL.**

**C.C. 356 /2022**

**Prosecution Witness : 6**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | **திரு. சரவண பாண்டி** | **Caste** | : | |
| **Father's Name** | : | **திரு. பாண்டி** | **Calling** | : | |
| **Village** | : | **செம்பட்டி** | **Religion** | : | **இந்து** |
| **Taluk** | : | **திண்டுக்கல்** | **Age** | : | **45** |
| | | | **Dated** | : | **04.11.2024** |

**இந்திய பிரமாண வகைமுறைச் சட்டம் 1969 ( பிரிவு 4)ன்படி சாட்சிக்கு சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டு பிரமாணத்தின் பேரில் சாட்சியின் வாக்குமூலம் பதிவு செய்யப் பட்டது**

---

**பட்டியல் சாட்சி 10 திரு. சரவண பாண்டி ஆஜர். சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு அ.சா. 6 ஆக முதல் விசாரணை செய்யப்பட்டார்.**

நான் மேற்கண்ட முகவரியில் குடியிருந்து கூலி வேலை மற்றும் விவசாய வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரியை தெரியும். அசா.1 ஐ தெரியாது. சம்பவம் பற்றி எனக்கு தெரியாது. என்ன பிரச்சனை என்றும் தெரியாது. போலீசார் என்னை விசாரிக்கவில்லை. நேற்றைய தினம் போலீசார் எனக்கு தொலைபேசி மூலம் பிரச்சனை நடந்தது அல்லவா, அதற்காக நீதிமன்றத்திற்கு வரச்சொன்னார்கள் அதனால் வந்தேன்.

**கற்றறிந்த அரசு தரப்பு வழக்கறிஞர் சாட்சி பிறழ் சாட்சியாக மாறிவிட்டதால் அரசு தரப்பில் அவரை குறுக்கு விசாரணை செய்வதற்கு அனுமதி கேட்டதன் பேரில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்படுகிறது.**

**<u>அரசு தரப்பு குறுக்கு விசாரணை:-</u>**

**கேத்தைய கவுண்டன் பட்டி மாணிக்கம் என்பவரை தெரியும். அவர் எனது பக்கத்து ஊர்காரரர். நானும், அந்த மாணிக்கமும் வேலை முடிந்தால் கேத்தைய கவுண்டன் பட்டியில் பேசிக் கொண்டு இருப்போம் என்றால் இல்லை. கடந்த 11.11.2013ம் தேதி இரவு சுமார் 08.00 மணி அளவில் நானும், லட்சுமணன், மாணிக்கம் ஆகியோர் கேத்தைய கவுண்டன் பட்டி முனியப்பன் கோவிலில் உள்ள சிமெண்ட் திண்ணையில் அமர்ந்து பேசிக் கொண்டு இருந்ததாகவும், அப்போது சுமார் 09.30 மணிக்கு எனது ஊரை சேர்ந்த குப்பன் மகன் முருகன், முருகன் மகன் வெங்கடேஷ் குமார், முருகனின் அப்பா குப்பன், தம்பி பழனிச்சாமி, அவரது மகன் நவநீத கிருஷ்ணன், பெருமாள், வேல் முருகன் ஆகியோர் கடற்பாறை மற்றும் கம்புகளுடன் பச்சைமலையான் ஊரில் இருந்து நடுப்பட்டி செல்லும் சாலை அருகில் வந்து நின்றதாகவும் சொன்னால் சரியல்ல. அன்றைய தினம் இரவு 09.30 மணி அளவில் எதிரி நாகராஜ், அசா.1 கண்மணி, அவரது கணவன் முருகன், மகன் வெங்கடேஷ் குமார் ஆகியோரை இரும்பு கம்பி, தடி, கற்களை வைத்து தாக்கியதாகவும், தேவிடியா மகளே என கெட்ட வார்த்தை சொல்லி திட்டியதாகவும், கொலை மிரட்டல் விடுத்தாகவும் போலீஸ் விசாரணையில் சொல்லிவிட்டு தற்போது எதிரிக்காக உண்மையை மறைத்து சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.**

R
KANAGARAJ

Digitally signed by R KANAGARAJ
Date: 2024.11.04 16:01:31 +0530